Under Section 173 BNSS

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8167293

1. District : திருப்பூர் மாவட்டம் | PS: இ.த.க.பிரிவு காவல்நிலையம் | Year: 2025 ஆண்டு | FIR No.: 10/2025/AC/TPR முத.அ. எண் | Date: நாள் 28.X.25

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption | Sections பிரிவுகள்: 7(a) & (b)
(ii) Act சட்டம்: Act 1988 as amended by | Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: PC (Amendment) Act, 2018 | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 30.9.25 | Date to : நாள் வரை 28.X.25
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 11.30 மணி | Time to : நேரம் வரை 17.00 மணி
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28.X.2025 | Time : நேரம் 18.30 மணி
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 28.X.2025 Vol.5 | Time : நேரம் 18.30 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — தமிழில் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 30 கி.மீ. தெற்கே.
Beat Number : முறைக் காவல் எண் —
(b) Address : முகவரி o/o. கிராம நிர்வாக அலுவலர், காடேடூர் கிராமம், பல்லடம் தாலுக்கா, திருப்பூர் மாவட்டம்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் — அருகில்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் J. ராமமூர்த்தி | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் ஜோசப் மணி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — | Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் டெய்லர் | (g) Address : முகவரி க.எண். 4/434-A, சந்தைமாரியம்மன் கோயில், காடேடூர் கிராமம், பல்லடம் தாலுக்கா, திருப்பூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) ஜெயக்குமார், VAO, காடேடூர் கிராமம், பல்லடம் தாலுக்கா, திருப்பூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதம் இல்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

நகல் தாள் இணைக்கப்படுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

T. R.S.J 28/10/2025

28/10/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 28.x.2025
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் பி. கோதாலமுகம்

Rank: நிலை .....No. எண் .....

காவல் அய்வாளர்
பே.த.க.பிரிவு, திருப்பூர்.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்ற நீதிபதி, முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக.

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.10/2025/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் B.கீதாலட்சுமி ஆகிய நான் 28.10.2025-ம் தேதி மாலை 18.30 மணிக்கு அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது திரு. திரு.J.ராமமூர்த்தி, த/பெ. ஜோசப் மணி, சந்தவநாயக்கன்பாளையம், காட்டூர் கிராமம், பல்லடம் தாலுக்கா, திருப்பூர் மாவட்டம் என்பவர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு அனுப்புநர், J.ராமமூர்த்தி, த/பெ.ஜோசப் மணி, க.எண் 4/434-A, சந்தவநாயக்கன்பாளையம், காட்டூர் கிராமம்,பல்லடம் தாலுக்கா, திருப்பூர். பெறுநர், உயர்திரு காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புத்துறை, திருப்பூர். ஐயா, நான் தற்காலிகமாக திருப்பூர் தென்னம்பாளையத்தில் என் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் திருப்பூர், தாராபுரம் ரோடு செட்டிபாளையத்தில் உள்ள G.D எக்ஸ்போர்ட் என்ற கம்பெனியில் டெயிலராக வேலை செய்து வருகிறேன். எங்களது பூர்வீக சொத்துக்கள் பல்லடம் தாலுக்கா, காட்டூர் கிராமத்தில் உள்ளது. எங்கள் பூர்வீக சொத்தானது பத்திர எண். 2021/1977 நாள் 24.10.1977ன்படி பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பட்டுள்ளது. எங்கள் மூலப்பத்திரத்தின்படி காட்டூர் கிராமம், பழைய சர்வே எண் 490/3Aல் பூமி உள்ளது. அந்த பத்திர படி எனக்கும் எனது உறிவினர்கள் சிலருக்கு மட்டும் காட்டூர் - கொடுவாய் என்ற மெயின் ரோட்டில் இருந்து பட்டா தடம் உள்ளது. அது பொது தடம் அல்ல. அந்த பூமியை நானும், எனது பங்காளிகள் மற்றும் உறவினர்கள் பாக பிரிவினை மற்றும் கிரையம் பெற்றுள்ளோம். அதில் எனது பெயர், எனது பங்காளிகள் மற்றும் உறவினர்கள் பெயர்கள் பட்டாவில் இல்லாததால் எனது தாத்தா மற்றும் அப்பா பெயரை நீக்கி, எங்கள் பெயரை பட்டாவில் சேர்க்கச் சொல்லி கடந்த 29.09.2025ம் தேதி பல்லடம் தாலுக்கா, காட்டூர் கிராம VAO திரு.ஜெயக்குமார் அவர்களை நேரில்

சென்று விசாரித்தேன். அவர் அதற்கு நிலம் சம்மந்தமான ஆவணங்களை கொண்டு வந்து கொடுக்குமாறு கூறினார். அதன்பின்னர் நான் அவருடைய செல்போன் எண்ணை வாங்கி கொண்டு, எனது செல்போன் எண்ணை அவரிடம் கொடுத்திருந்தேன். பின்னர் அன்றையதினமே மாலை சுமார் 7.00 மணியளவில் VAO ஜெயக்குமார் அவரது செல்போன் எண். 77087 49484லிருந்து எனது செல்போன் எண். 98658 94967ற்கு அழைத்து மறுநாள் ஆவணங்களை கொண்டு வர சொன்னார். அதனால் நான் 30.09.2025ம் தேதி காலை சுமார் 7.30 மணியளவில் VAO திரு.ஜெயக்குமார் அவர்களை எனது செல்போனில் இருந்து அழைத்து நான் எனது மாமியாருக்கு பாத சிகிச்சைக்கு வேண்டி பல்லடம், பனப்பாளையம் இந்தியன் ஆயில் பின்புறம் உள்ள வீட்டுமுறை வைத்தியத்திற்கு அழைத்து வந்திருந்த விபரத்தையும், நில ஆவணங்களை கொண்டு வந்திருப்பதையும் அவரிடம் கூறினேன். அதற்கு அவர் பின்னர் என்னை அழைப்பதாக கூறி செல்போன் இணைப்பை துண்டித்துவிட்டார். அதன் பின்னர் அன்றைய தினம் காலை சுமார் 10.30 மணியளவில் VAOக்கு ஜெயக்குமார் அவர்களை நான் எனது செல்போனில் தொடர்பு கொண்ட போது அவர் தாலுக்கா அலுவலகத்தில் வேலையிருப்பதாக கூறி செல்போன் இணைப்பை துண்டித்துவிட்டார். பின்னர் அன்றைய தினமே காலை சுமார் 11.30 மணியளவில் VAO திரு.ஜெயக்குமார் அவர்கள் அவருடைய செல்போனில் இருந்து என்னை தொடர்பு கொண்டு எங்கு இருக்கிறீர்கள் என்று கேட்டார். நான் எனது மாமியாரின் சிகிச்சைக்காக அவருடன் உள்ள விபரத்தை சொன்னேன். அதற்கு அவர் பல்லடம் பொங்கலூர் சாலையில் வடபுறம் உள்ள கீதா ஸ்வீட் அன்ட் பேக்ஸ் என்ற கடைக்கு வரச் சொன்னார். சிறிது நேரத்தில் மீண்டும் அவர் என்னை செல்போனில் அழைத்த போது நான் அந்த கடைக்கு வந்து கொண்டிருப்பதாக சொன்னேன். அதன்பிறகு நான் அந்த கடைக்கு சென்று என்னிடமிருந்த நிலம் சம்மந்தமானஆவணங்களை அவரிடம் கொடுத்தேன். ஆவணங்களை பார்வையிட்ட பின்னர் பட்டாவில் பெயர் சேர்க்க ரூ.40,000/- செலவாகும் என்றும் சொன்னார். அதற்கு நான் அவ்வளவு பணம் என்னிடம் இல்லை என்று சொன்னேன். அதற்கு

அவர் ஆன்லைனில் பதிவு செய்ய முதலில் ரூ.10,000/- கொடுக்குமாறு கேட்டார். அப்போது நான் எனது மாமியாரின் சிகிச்சைக்காக எடுத்து வந்திருந்த பணத்திலிருந்து ரூ.10,000/-த்தை அவரிடம் கொடுத்தேன். அதன் பின்னர் 04.10.2025ம் தேதி எனது செல்போனில் பட்டாவில் பெயர் சேர்க்க விண்ணப்பம் வந்துள்ளதாக குறுஞ்செய்தி வந்தது. அதில் விண்ணப்ப எண்.2025/0103/32/699699 என்று வந்தது. பின்னர் ஒரு நாள் எங்களது பக்கத்து தோட்டக்காரர் பூமியை அளக்க வந்திருந்த VAO திரு.ஜெயக்குமார் எங்கள் தோட்டத்திற்கும் வந்திருந்தார். அப்போது என்னை பார்த்து மீதி பணம் ரூ.30,000/-யை கொடுத்தால் தான் பட்டாவில் பெயர் சேர்க்க முடியும் என்று கூறினார். அதற்கு நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று கூறினேன். ஆனால் அவர் கண்டிப்பாக தான் கேட்ட பணத்தை கொடுக்க வேண்டும் என்றும், அவ்வாறு கொடுக்கவில்லை என்றால் வேலை நடக்காது என்றும் கூறினார். மேலும் அடிக்கடி எனக்கு போன் செய்து மீதி பணம் ரூ.30,000/-யை கொடுத்தால் தான் சீக்கரமாக வேலையை முடிக்க முடியும் என்று பணத்தை கேட்டு வந்தார். நானும் சரி பார்க்கலாம் என்று கூறி வந்தேன். 5.10.2025, 7.10.2025, 17.10.2025 மற்றும் 18.10.2025 ஆகிய தேதிகளில் VAO திரு.ஜெயக்குமார் அவர்கள் தொடர்ந்து என்னை எனது செல்போனில் தொடர்பு கொண்டு மீதி பணம் ரூ.30,000/-யை கொடுத்தால் தான் பட்டார் பெயர் சேர்ப்பதாக கூறினார். அதன் பின்னர் 19.10.2025ம் தேதி VAO திரு.ஜெயக்குமார் அவர்கள் என்னை பலமுறை அவரது செல்போனிலிருந்து எனது செல்போனுக்கு தொடர்பு கொண்டு பட்டாவில் பெயர்களை சேர்க்க மீதி தொகை ரூ.30,000/-யை எப்போது கொடுப்பீர்கள் என்று கறாராக கேட்டார். அதற்கு நான் பணம் இன்னும் ரெடியாகவில்லை சார் என்று கூறினேன். அதற்கு அவர் உயர் அதிகாரிகளுக்கும் பணம் கொடுக்க வேண்டும் என்று கூறினார். அதற்கு நான் பணத்தை ஏற்பாடு செய்கிறேன் என்று கூறினேன். அதன்பின்னர் 24.10.2025ம் தேதி காலை சுமார் 10.30 மணியளவில் VAO திரு.ஜெயக்குமார் அவரது செல்போனிலிருந்து என்னை தொடர்பு கொண்டு பேசினார். அப்போது தான் ஏற்கனவே கேட்ட மீதி பணம் ரூ.30,000/- பணத்தை உடனடியாக கொடுக்க

வேண்டும் என்றும், அவ்வாறு கொடுக்கவில்லை என்றால், 23.10.2025ம் தேதி பட்டாவில் எங்களது பெயர்களை ஏற்கனவே சேர்த்திருந்ததை நீக்கி விடுவதாக கூறினார். அதனால் 25.10.2025ம் தேதி மதியம் சுமார் 1.00 மணியளவில் VAO திரு.ஜெயக்குமாரை அவர்களின் அலுவலகத்திற்கு அருகாமையில் சந்தித்த போது அவர் ஏற்கனவே கேட்டிருந்த மீதி பணம் ரூ.30,000/-யை கொண்டு வந்துள்ளீர்களா என்று கேட்டார். நான் என்னிடம் செலவிற்காக ரூ.13,000/- வைத்திருந்த விபரத்தை கூறினேன். அதற்கு அவர் அந்த பணம் ரூ.13,000/-த்தை என்னிடம் கொடுத்து விடுங்கள் என்றும் மீதி பணம் ரூ.17,000/-யை இரண்டு, மூன்று நாட்களுக்குள் கொண்டு வந்து கொடுக்க வேண்டும் என்றும் இல்லை என்றால் பட்டாவில் ஏற்கனவே சேர்க்கப்பட்டிருந்த எங்களது பெயர்களை நீக்கி விடுவதாகவும் கூறினார். அதன் பிறகு மீண்டும் 27.10.2025ம் தேதி காலை சுமார் 11.15 மணியளவில் VAO திரு.ஜெயக்குமார் அவர்கள் அவரது செல்போனிலிருந்து எனது செல்போனுக்கு தொடர்பு கொண்டு மீதி பணம் ரூ.17,000/- ரெடியாகிவிட்டதா என்று கேட்டார். நான் எனது சொந்தகாரர்கள் பணம் தராத விபரத்தை கூறினேன். அதற்கு அவர் அரைமணி நேரத்தில் பணத்தை ரெடி செய்துவிட்டு கூப்பிடுமாறு சொன்னார். நான் அவ்வளவு பணம் ரெடி செய்ய முடியாததால் அவரை திரும்ப போனில் அழைக்கவில்லை. ஆனால் அவர் மீண்டும் பகல் 1.45 மணியளவில் என்னை அழைத்து நாளை திருவண்ணாமலை கோவிலுக்கு செல்கிறேன் அதனால் மீதி பணம் ரூ.17,000/-யை கொடுத்தால் லீவு போட்டு கோவிலுக்கு செல்வேன் என்று சொன்னார். நான் சரி பார்க்கிறேன் என்று சொல்லி போனை வைத்துவிட்டேன். மீண்டும் மாலை 4.00 மணிக்கு VAO திரு.ஜெயக்குமார் என்னை போனில் அழைத்து பணத்தை பற்றி கேட்டார். நான் ஏற்பாடு செய்ய முடியவில்லை என்று சொன்ன போது நாளை பணம் கொடுக்கவில்லை என்றால் பட்டாவில் இருந்து பெயரை நீக்கிவிடுவதாக கூறினார். இன்று 28.10.2025ம் தேதி காலை 9.30 மணிக்கு VAO திரு.ஜெயக்குமார் அவர்கள் அவரது செல்போனிலிருந்து எனது செல்போனுக்கு தொடர்பு கொண்டு மீதி பணம் ரூ.17,000/-த்தை இன்று கண்டிப்பாக கொடுக்க வேண்டும் என்று கேட்டார். நான்

இன்னும் பணம் ரெடியாகவில்லை என்று சொல்லி போனை வைத்துவிட்டேன். மீண்டும் பகல் 2.20 மணியளவில் என்னை தொடர்பு கொண்டு பணம் ரூ.17,000/- ரெடியாகிவிட்டதா இல்லையா என்று கேட்டார். நான் இன்னும் ரெடியாகவில்லை என்று சொன்ன போது அவர் பல்லடம் தாலுக்கா அலுவலகத்தில் மீட்டிங்கில் இருப்பதாகவும், மாலை 4.00 மணிக்கு மீட்டிங் முடியும் என்றும் அதற்குள் பணத்தை ரெடி செய்துவிட்டு பல்லடத்திற்கு வந்து அவரை போனில் அழைக்குமாறு என்னிடம் சொன்னார். நானும் சரி சொல்லி போனை வைத்துவிட்டேன். மீண்டும் மாலை 5.00 மணிக்கு VAO திரு.ஜெயக்குமார் அவர்கள் அவரது செல்போனிலிருந்து எனது செல்போனுக்கு அழைத்து மீட்டிங் முடிந்துவிட்டது பணத்தை ரெடி செய்துவிட்டீர்களா என்று கேட்டார். நான் ஏற்பாடு செய்ய முடியவில்லை என்று சொன்ன போது நான் இறப்புக்கு திருச்சி செல்கிறேன் பணம் ரூ.17,000/- கொடுங்கள் என்று கேட்டார். நான் அவ்வளவு பணத்தை இப்போது உடனடியாக ஏற்பாடு செய்ய முடியவில்லை என்று சொன்னபோது வேலை முடித்து ஒரு வாரம் ஆகியும் பணத்தை கொடுக்கவில்லை என்றும் உயாதிகாரிகளுக்கு என்னால் பதில் சொல்ல முடியவில்லை என்றும், அதனால் நாளை 29.10.2025ம் தேதி காலை கண்டிப்பாக மீதி பணம் ரூ.17,000/- கொடுக்க வேண்டும் என்று சொல்லி போனை வைத்துவிட்டார். எனக்கு காட்டூர் கிராம VAO திரு.ஜெயக்குமார் அவர்களுக்கு மேற்கொண்டு பணம் ரூ.17,000/- கொடுக்க விருப்பம் இல்லை. எனவே அவர் மீது சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். Sd/-xxxx 28/10/2025 (J.ராமமூர்த்தி). Submitted, Received the complaint on 28.10.2025 at 18.30hrs and made preliminary verification between 18.30 hrs and 19.00 hrs and after getting approval from DVAC, Chennai, a case was registered in Tiruppur V&AC Cr.No.10/2025/AC/TPR u/s 7 (a) & (b) of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 on 28.10.2025 at 19.00 hrs. Sd/- xxxx (B.Geethalakshmi) 28/10/2025 Inspr. V&AC, TPR.

Original FIR along with original complaint of Tr.J.Ramamoorthy, S/o.Josephmani, D.No.4/434-A, Santhavanaickenpalayam, Kattur Village, Palladam Taluk, Tiruppur Dirtrict is submitted to the Hon'ble Principal District and Sessions Judge, Principal District and SessionsCourt, Tiruppurand a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

28/1/25

(B.Geethalakshmi),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur.